Guaranteed Circulation 1,000 Copies.

Registered No. M. 1124.

Vol. I] [No 7.

இந்தியன் லா ஜர்னல்

(மாதம் நான்குமுறையாக பிரதி சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

1914௵ செப்டம்பர்௴ 26௳ சனிக்கிழமை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 NOV 1914
MADRAS.

ரிபோர்ட்டுகள்.

ஹைகோர்ட் தீர்ப்புகள்

PRINTED AND PUBLISHED BY S. SUBRAMANYA AIYAR,
AT THE INDIA PRINTING WORKS, 117, ARMENIAN STREET, MADRAS.—7—11—1914.

THE INDIAN LAW JOURNAL.

(TAMIL EDITION.)

இந்தியன் லா ஜர்னல்.

(தமிழ் பிரசுரம்.)

(மாதம் நான்குமுறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.)

வருஷசந்தா.

	ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ரெங்கூனுக்கு தபால் சார்ஜ் உள்பட	6—0—0
சிங்கப்பூர் பினங்கு	8—0—0
ஒரு வார சஞ்சிகை	0—4—0

பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி கடிதம் எழுதவேண்டும். இல்லாவிடில் வி. பி. தபாலில் அனுப்பும்படி உத்திரவு செய்யவேண்டும்.

மாதிரி சஞ்சிகை வேண்டியவர்கள் ½ அணா தபால் ஸ்டாம்பு அடக்கம் செய்து அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

	ரூ. அ. பை.
48 சஞ்சிகைகளிலும் ஒரு வருடத்திற்கு ஒரு பக்கத்திற்கு	60—0—0
6 மாதங்களுக்கு ...	30—0—0
3 ,, ...	15—0—0

இந்த பிரகாரம் பாதி பக்கத்திற்கும், கால் பக்கத்திற்கும் கணக்கு செய்துகொள்ளவேண்டும். சாஸ்வத ஒப்பந்தம் செய்கிறவர்கள் மானேஜருடன் பிரத்யேக ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

விளம்பரம்.

இந்தியன் லா ஜர்னலுக்கு சந்தாதார்கள் சேர்க்க கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்,

இந்தியன் லா ஜர்னல் ஆபீஸ்,

117, அரமனைக்காரத் தெருவு, சென்னை.

இந்தியன் லா ஜர்னல்

மாதம் நான்கு முறை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிரசுரிக்கப்படுகிறது.

Vol. I. தொ. 1. | 26TH SEPTEMBER 1914. | No. 7. நெ. 7.

OFFICE OF THE REGISTRAR OF JOINT ... 12 NOV 1914 MADRAS.

முக்கிய அறிவிப்பு.

வெகு சந்தாதாரர்களின் வேண்டுதலின்படி இந்த சஞ்சிகை முதல் வெளியிடப்படும் ஹைகோர்ட்டு தீர்மானங்களை ஸிவில், கிரிமினல் என்று வரையிட்டு, ஓயாமல் வியவசாயிகளுக்கு ஏற்படும் ரிவினியூ வியவாஹாரங்களுக் குறிய விஷயங்களையும் சுலப நடையில் அச்சிடலாமேனோம்.

இந்தியன் லா ஜர்னல்.

1914ஆம் செப்டம்பர்மீ 26உ சனிக்கிழமை.

அமெரிக்காவில்.

விசித்திர விவகாரங்கள்.

1. டெலிபோன் (மின்சார பேசுங்கருவி) வழியாய் ஓர் பெண்பாலை திட்டி பயமுறுத்துவது தாக்குவதென்னுங் குற்றமாகமாட்டாது.

2 மரணசாஸனத்தை டைப்படித்து சிருஷ்டனை செய்த விவகாரத்தில், எந்தடைப்ரைடிங் இயந்திரத்தினால் சிருஷ்டனை செய்ததாக சொல்லப்பட்டதோ, அதைப்போன்ற முக்கிய குறிப்புகளையுடைய மற்றொரு டைப்ரைடிங்கருவியினால் செய்யப்பட்டவேலையை, சிருஷ்டனையான மரண சாஸனத்தையும், அதற்கு ருஜுவாகத்தயாரிக்கப்பட்ட திருஷ்டாந்த ரிகார்ட்டுகளையும் உண்டாக்கிய இவ்விரண்டு இயந்திரங்களின் ஒற்றுமையை ருஜுப்படுத்தலாமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. ஒரு வைத்தியர், தான் செய்யுந்தொழிலுக்குரிய ஆயுதங்கள், புஸ்தகங்கள், மருந்துகள் முதலியவைகளை வைப்பதற்காக இரும்புப் பெட்டியை, டிக்ரி நிறை வேற்றுவதில் ஜப்தி செய்யக்கூடாது.

4. தன் குமாரனைக் கல்யாணம் செய்துகொள்ள ஒரு பெண்பாலை ப்ரேரேபிப்பதற்காக, தன் குமாரனுக்குப்பெரிய ஸ்திதியுண்டென்று தாய் சூது செய்து அப்பெண்பாலை கலியாணத்திற்கு உட்படுத்தினால், தாயின் வார்த்தைகளை நம்பி அவள் குமாரனை விவாகஞ் செய்துகொண்ட பெண் பாலுக்கு நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்க உட்படுத்தப்படுவாள்.

5. ஒருவன் மரண முண்டாக்கக் கூடிய ஆயுதங்களை யணிந்துகொண்டு மனதார, வேண்டுமென்று ஆயுதபாணியான மற்றொருவனோடு சண்டை செய்ய ஆரம்பித்து, அச்சண்டையில் ஒருவன் கொல்லப்பட்டால் அக்கொலையை யுண்டாக்கினவன் மரண தண்டனைக்கு உள்ளாவான். மேலும், அவன் ஜாமீன்பேரில் விட அருகனாகான்.

6. ஒருவனுடைய கோழிகள் அண்டை வீட்டானுடைய நிலத்தில் அக்கிரமமாய் நுழைந்து தானியத்தை யழித்தன. நிலத் தின் சொந்தக்காரன் அக்கோழிகளைக்கொல் லத்தக்கவனல்ல. ஆனல் அக்கோழிகளை பட்டிண்டில் போடவோ, அழிந்து போன தானிய மாசூல் நஷ்டத்திற்கு தாவா செய்யவோ அவனுக்குப்பாத்தியம் உண்டு.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

ஜட்ஜிகள் :—ஓல்ட்பீல்டு.
நேபியர்.

A. A. O. No. 77 of 1913.
1914ஷு ஜூலை 29உ.

தாசி ரெட்டி எல்லமாந்தார்—அப்பீல் வாதி.

v.

சிக்காகொல்லி சின்ன பிச்சய்யா } அப்பீல்பிரதி வாதி.

ஒரு டிக்ரிபெற்றவன் அந்த டிக்கிரியை நிறை வேற்றும் வரையில் ஏலத்தை நிறுத்தாமல் அதிக போட்டா போட்டிவருகிற வரையில் நடத்திக்கொண்டேயிருக்க வேண்டுமென்று மனு கொடுத்துக்கொண்ட வகையில் அந்த மனு காலவரை சட்டத்தின் 182-வது வாக்கியத்தின்படி டிக்கிரியை நிறைவேற்றுவதற்கனுசரணையான பிரயத்தினமென்றே கொள்ளப் படுகிறது.

1906ஷு 314 நெ. அசல் வியாச்சியத்தில் நரசருவு பேட்டு டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டாரிடம் தாக்கலான 1912ஷுத்திய 72-ம் நெம்பர் டிக்கிரி நிறைவேற்ற கொடுபட்டமனுவின் பேரிலான உத்திரவின்பேரில் 1913ஷுத்திய 35 நெ. அப்பீல் வியாச்சியத்தில் குண்டூர் ஜில்லா கோர்ட்டின் உத்திரவின் பேரில் அப்பீல்.

தீர்மானம்.

கீழ் கோர்ட்டார் இரண்டுபேரும் டிக்கிரி நிறைவேற்றும் வகையில் அதிக போட்டா போட்டி வருகிற வரையில் ஏலத்தை நிறுத்தி நடத்தும்படி டிக்கிரிபெற்றவன் மனு கொடுத்துக்கொண்டவகையில் அப்பீல் பிரதிவாதி பக்ஷம் அவர்கள் செய்த தீர்ப்பு கிரமமானது. திரயலோக்ய நாத்துக்கும் ஜோதிபிரகாஷ் நந்திக்கும் நடந்த வியாச்சியத்திலும் அந்தப்படியே தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கீழ் கோர்ட்டு அப்பீல் ஆர்டரை காயப்படுத்தி இந்த அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய் திருக்கிறோம்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சதாசிவய்யர்.
தயாப்ஜி. } 1912-ஷுத்திய 727 நெம்பர் 2-வது அப்பீல்.

1914ஷு ஜூலை 16உ.

புலின் ஹோலியில் முரிகோலி ராமன் நம்பியார்— அப்பீல்வாதி.

v.

புத்தாலத்து காக்கோடன் ராமன் நம்பியார் } அப்பீல் பிரதி வாதி.

நடந்துகொண்டிருக்கிற கானும் முடிவுறுவதற்கு முன் ஒரு கர்ணவனல் கொடுக்கப் பட்டமேல்சார்த்தானது அப்படி அதை கொடுக்க அவசியமிருந்தாலும் அல்லது அதனல் தாறவாடுக்கனுகூல மிருந்தாலொழிய அது ஒப்புக்கொள்ளத் தக்கினதல்ல.

தலச்சேரி டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டில் நடந்த 1908-ஷுத்திய 449 நெ. அசல்வியாச்சியத்தில் பிறந்த தீர்ப்பின் பேரில் 2-வது அப்பீல்.

தீர்மானம்.

முன்னிட்ட கானம் பத்திரங்களின் வாய்தா முடிகிறதற்கு முன்னிட்டு ஒரு கர்ணுவனிடமிருந்து ஒரு மேல்சார்த்தின்படி பாத்தியமடைந்தவன் அந்தமேல்சார்த்துத் தனக்குக் கொடுக்கத்தகுந்த அவசியமிருந்ததாக ருசுவுகொடுக்க வேண்டியது அனுவசியமென்றும் அப்படி ஏற்பட்ட மேல்சார்த்து சரியானதாயிராவிட்டாலும் பின்னிட்டு வந்த கர்ணுவான் கோரிக்கையின்படி மாற்றப்படக்கூடாதென்றும், ஆனால் அந்த கர்ணுவானின் குடும்பத்துக்கு நஷ்டமுண்டாக்கி அல்லது தர்வாட்டை மோசஞ்செய்து தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் லாபத்தை உண்டாக்கிக் கொண்டால் மட்டும் அது செல்லாதென்றும் ஜில்லா ஜட்ஜி அபிப்பிராயப்பட்டதாக தோன்றுகிறது. ஆனால் இந்த அபிப்பிராயம் இந்த கோர்ட்டில் செரிய சிறிகண்டனுக்கும் கிருஷ்ணன் நம்பியாருக்கும் நடந்த வியாச்சியத்தில் உண்டான தீர்ப்புக்கு எதிரிடையாயிருக்கிறது. அந்தமாதிரி பராதீனப்படுத்த அவசரமிருந்தாலும், அல்லது தார்வாடுக்கு லாபமானதாயிருந்தாலும், அல்லாமல் ஷை மேல்சர்த்தை ஒப்புக்கொள்ளத் தக்கினதல்ல. இது விஷயமான சட்டத்தைச் சரியாய் கவனிக்காமல் ஷை ஜில்லா ஜட்ஜி தீர்ப்புசெய்திருப்பதைத் தள்ளிவிட்டு இந்த அப்பீலை மறுபடி நூதனமாய் விசாரிக்கும்படி அவருக்கே திருப்பி அனுப்புகிறோம். இந்த கோர்ட்டில் நேர்ந்த செலவுகளை கொடுக்கப்படவேண்டி ... ஜில்லா ஜட்ஜி விசாரணை முடிந்த பிறகு

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சதாசிவய்யர். தயாப்ஜி.	1911ஞுத்திய 874 நெ. 2-வது அப்பீல்.

1914ஞு ஜூலைமீ 16உ.

பங்காருசாமி அய்யங்கார்—அப்பீல் வாதி.

வ.

A. R. A. R. S. M. சோம சுந்திரம் வகைரு	அப்பீல் பிரதிவாதி.

சுருக்கம்:—A, B, C என்கிற மூன்றுபேர் யெழுதிக் கொடுத்ததாக செய்திருக்கிற ஒரு தஸ்தாவேஜில், A-யும் B-யும் மட்டில் கையொப்பமிட்டிருந்த பக்ஷத்தில், C-யும் கூட கையொப்பம் போடுகிற தென்கிற நிபந்தனையின் பேரில் அந்த தஸ்தாவேஜி ஏற்பட்டிருக்க அவன் அந்தப்படி நடக்காத பக்ஷத்தில் Aயும் Bயும் அதின்படி நடக்க வேண்டிய கடமையிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம் என்பது. இதுவிஷயத்தில் 35 மதராஸ் 389-ல் சிவசாமி செட்டிக்கும் சேவுகன் செட்டிக்கும் நடந்த வியாச்சியத்தையும், 31 மதராஸ் 114-ல் கிருஷ்ணமாசாரிக்கும் நரசிம்மாசாரிக்கும் நடந்த வியாச்சியத்தையும் பார்க்க. இந்த அப்பீல் திருநெல்வேலி டி. மு. கோர்ட்டு 1908-ஞுத்திய 29-ம் நெ. அசல்வியாச்சியத்தில் செய்த டிக்கிரியின் பேரில் திருநெல்வேலி சபார்டினேட்டு ஜட்ஜி கோர்ட்டு 1909-ஞுத்திய 562 நெ. அப்பீல் வியாச்சியத்தின் தீர்ப்பின் பேரில் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்.

A, B, C ஆகிய மூவரும்சேர்ந்து பிறப்பித்ததாகசெப்பியெழுதிய ஒருதஸ்தாவேஜில் A,B. மட்டும்கையெழுத்து செய்ததும், அப்படியிருந்தபக்ஷத்தில் C என்பவனும்கூட அதில் கையெழுத்துச் செய்து பூர்த்தி செய்தால்மட்டும் அந்த தஸ்தாவேஜின்படி நடக்க அவர்கள் உ

டன் படுவதாகச் சொல்லுவதும் அது சம்மந்தமான இதர சங்கதிகளை அனுசரித்து விமர்சிக்க வேண்டிய அம்சங்களா யிருக்கின்றன. இந்த பிரஸ்தாப கேசில் கீழ் அப்பீல் கோர்ட்டார் எல்லா சங்கதிகளையும் வியாச்சியத்தின் போக்கையும்யோசித்து தஸ்தாவேஜில்கண்ட தேசிகாசாரி யென்கிறவன் அதில் கையெழுத்து செய்யாவிட்டாலும் A குறிப்பிட்ட தஸ்தாவேஜின் நிபந்தனைகளுக்குள்படுவதாக 1-வது பிரதிவாதி (அதாவது இந்த கோர்ட்டில் அப்பீல்தாரன்) ஒப்புக்கொண்டதாக பாவப்பட்டார்கள். இந்தப்படி கீழ் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்ப்பு முற்றும் திருப்திகரமா யில்லாவிட்டாலும் அந்த கோர்ட்டாருடைய தீர்ப்புக்கு அனுசரணையான சாக்ஷியமில்லை யென்று சொல்லக்கூடாது. ஷை தஸ்தாவேஜின்படி வாதி தனக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தும்படி 1-வது பிரதிவாதியைக் கேட்டதாயும், 1-வது பிரதிவாதி சீக்கிரம் செலுத்தி விடுவதாகச் சொன்னதாயும் அவனுடைய 1-வது சாக்ஷி சொல்லுகிறான். இதனால் தேசிகாசாரி ஷை தஸ்தாவேஜில் கையொப்ப மிடாவிட்டாலும் பிரதிவாதி, தான் அதன்படி நடக்க ஒப்புக்கொண்டவனாகிறான். சபார்டினேட் ஜட்ஜியானவர் தஸ்தாவேஜின் படிக்கான சாக்ஷியத்தைத் தப்பாய் அர்த்தம்பண்ண வில்லையென்று எங்களுக்கு திருப்தியாய் ஏற்படவில்லை.

ஆகையால் இந்த 2-வது அப்பீலை செலவுடன் தள்ளுபடி செய்திருக்கிறோம்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்டு.

ஜட்ஜிகள்:— சதாசிவய்யர். தயாப்ஜி. } 1913-ளு த்திய 541 நெ. 2-வது அப்பீல்.

1914-ளு ஜூலை மீ 21௨.

ஐய்யகிரி விரேசலிங்கம்—அப்பீல் வாதி.

v.

கோவூரி பசிவி ரெட்டி வகைரா 2-பேர் } அப்பீல் பிரதிவாதிகள்.

சுருக்கம்:—ஒரு வியாஜ்ஜியத்தில், விவாதத்திலிருக்கும் அம்சங்களை விமர்சிக்க ஹேதுவாகிற நிபந்தனைகள் அந்த வியாஜ்ஜியத்துக்கு விஷயமாகிற அம்சங்களில் ஒன்றாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை விமர்சித்துக் கொடுக்கப்படும் தீர்ப்பில் அந்த நிபந்தனைகள் சேர்க்கப்படலாம்.

கிருஷ்ணா ஜில்லா எல்லூர் சபார்டினேட்டு ஜட்ஜி கோர்ட்டின் 1909-ளு த்திய 52 நெம்பர் அசல்வியாச்சியத்தில் பிறந்த தீர்ப்பின் பேரில் கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டு 1910-ளு த்திய 584 நெம்பர் அப்பீல் தீர்மானத்தின் பேரில் 2-வது அப்பீல்.

தீர்ப்பு.

இந்த அப்பீலைப் பிடிக்கக்கூடாதென்று 2 ஆக்ஷேபணைகள் செய்யப்பட்டன. முதலாவது 23-வது உத்திரவு 3-வது விதியின்படி ராஜினாமாமனுவையனுசரித்துச் சபார்டினேட் ஜட்ஜி செய்த உத்திர...

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 12 NOV 1914 MADRAS.

டைய அபிப்பிராயத்தை தெரிந்துக் கொள்ள வாவது அல்லது தான் விசாரிக்க வேண்டிய கடினமான விவகாரத்தை ஐகோர்ட்டார் தீ மானிக்கும் பொருட்டு மாற்றவாவது குற் விசாரணை சட்டத்தின் 438-வது பிரிவு இடம் கொடுக்கவில்லை.

C. R. C Nos. 664 of 1913 & 539 of 1913. } 13-3-14.

தாமப்ப பாலே முதலிய வர்கள். } மனுதார்கள்.

v.

இந்தியா சக்கிரவர்த்தி—அப்பீல் பிரதிவாதி

ஸெஷன் கோர்ட்டாரால் பிரதியேகமாய் விசாரிக்க கூடிய கேசில், வாதி தரப்பில் ஆஜர் செய்யப்பட்ட ஸாக்ஷிகளின் வாக்கு மூலங்கள் கொஞ்சம்கூட நம்பத்தகாதவண்ண மிரு தால், பிரதம விசாரணையைச் செய்யும் மாஜிஸ் திரேட் குற்றவாளிகளை விடுதலை செய்ய நியாய முண்டு. (Sec. 436, Cr. P. C.)

Cr. As. Nos. 50 & 51 of 1914.

பப்ளிக் பிராஸிகியூடர்—அப்பீல் வாதி.

v.

ரூவர் யுன்னித்திரியும் மற்றொருவரும் } எதிரிகள்.

குற்ற விசாரணை சட்டத்தின் 195-வது பிரிவின்படி பிராது செய்ய கொடுக்கப்பட்ட அனுமதிக்கேற்றபடிக்கும் 6 மாதகாலம் அவ் வனுமதியை காயம் செய்த கடைசி அப் பீல் பரிசீலனை கோர்ட்டு உத்திரவு தேதி முதல் கணக்கிடப்பட வேண்டும்.

கிரிமினல் பிரிவு.

கிரிமினல் விவகாரங்களில் தண்டனை விதிப் பதற்காக இந்தியன் பீனல் கோட்டும், சாக்ஷி யத்தை விமரிசையாய் ஒப்புக்கொள்ளத் தக் கது அல்லது தகாததென்று பகுத்து சாக்ஷி யம் ருஜு கொடுக்கும் பொறுப்பு முதலிய வைகளை அனுஷ்டிக்கச்செய்ய இந்து தேசத்

இராஜியானதுண்டா? அந்த ராஜியின்படி 1-வது பிரதிவாதி கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டிய துண்டா? அந்த நிபந்த னையை அனுசரித்து டிக்கிரி பிறப்பிக்கலாமா என்பவைதான். அந்தப்படி டிக்கிரி பிறப்பிக் கலாமென்று நாங்கள் நினைக்கிறோம்.

அப்பீல் தாருடைய வக்கீல் மிஸ்டர் ஜைனு த்தின் (இவர் வியாச்சியத்தை ரொம்ப சரியாய் நடத்தினார்). மற்றொரு ஆக்ஷேபம் சொன்னார். அதாவது அப்படி செய்திருந்த ஒப்பந்தம் வி யாச்சியத்தில் சம்பந்தப்பட்டதல்ல வென்பது. சில பழமையான கேசுகளில் வியாச்சியத்தி ற்கு நேராக சம்பந்தப்படாத சங்கதியை டிக்ரி யில் சேர்க்கக் கூடாதென்றிருந்தாலும், நாங் கள் இப்பால் உண்டான அடியில்கண்ட வியாச் சியங்களின் தீர்ப்புகளை யனுசரித்து ஒரு வியாச்சியத்தில் விவாதத்தை பைசல் செய்ய ஏதுவாகிற எல்லா ஷரத்துகளையும், அந்த ஷரத்துகள் அந்த வியாச்சிய விஷயத்திற்குச் சம்பந்தப்பட்டதா யிருந்தாலும் இல்லாவிட் டாலும் அவைகளை டிக்கிரியில் காணலாமெ ன்றே அபிப்பிராயப்பட்டு இந்த 2-வது அப் பீல் நிற்காதென்று தீர்மானித்து, முதல் பிரதி வாதி செலவுடன் அப்பீலைத்தள்ளிவிட்டோம்.

MADRAS HIGH COURT.

மதராஸ் ஐகோர்ட்.

ஜட்ஜிகள்:—சதாசிவய்யர்.

தயாப்ஜி.

1912ஞுத்திய 127 கெம்பர் 2-வது அப்பீல்.

நாராயண நம்பூத்ரிபாத்—அப்பீல்வாதி.

v.

நாராயண நம்பூத்ரிபாத் வகைரு } அப்பீல் பிரதிவாதிகள்.

சுருக்கம்:—(1) ஒரு வியாச்சியத்தில் சம்ம ந்த மில்லாதவர்களை அந்த வியாச்சியத்தில் கக்ஷிக்காரரில் சேர்ப்பதினாலேயே அதில் பிற

ந்த அப்பீல் தீர்ப்பை மாற்ற நியாயமில்லே. ஆனல் அப்படி தப்பாகச்சேர்த்ததிஞல் அந்த வியாச்சியத்தின் சாதக பாதகங்களே பாதிப்பதா யிருந்தால்மட்டும் மாற்றலாம். (2) ஒரு வியாச்சியத்தின் மதிப்புத்தொகை ஒரு முன்சிப்பின் அதிகாரத்துக்கு அதிகப்பட்டிருப்பதிஞலேயே அந்த முன்சிப்பு செய்த தீர்ப்பு மாற்றப்படாது. ஆனல் அந்த முன்ப்சிபு அந்த வியாச்சியத்தை பைசல் பண்ணுவதால் அந்த வியாச்சியத்தின் சாதக பாதகங்களே பாதிப்பதாயிருந்தால் மட்டும் அதை மாற்றலாம். வியாச்சிய விவரம் மஞ்சேரி டி. மு. கோர்ட்டில் 1907ஷுத்திய 161 நெம்பர் அசல்வியாச்சியத்தில் கொடுத்த தீர்ப்பின் பேரில், தென் மலபார் ஜில்லா கோர்ட்டு 638, 639, 640, 654, இந்த அப்பீல்களில் பிறந்த டிக்கிரியின் பேரில் அப்பீல் வியாச்சியத்தில்

தீர்ப்பு:

பார்ட்டிகளேத் தப்பாய்ச் சேர்த்திருந்ததென்பதற்கு சாக்ஷியமுமில்லே. அப்படியிருந்திருந்த போதிலும் அதிஞல் வியாச்சியத்தின் சாதக பாதகங்கள் கெட்டுப் போயிற்றென்று வாதிக்கப்படவுமில்லே. ஆகையிஞல் இதற்கு முன்ஞல் நடந்த தீர்மானங்களே யனுசரித்து கட்சிக்காரர்களே தப்பிதமாய் சேர்த்திருக்கிறதிஞலேயே முன்சிப்பின் தீர்ப்பைமாற்றப் போதுமான ஆதாரமில்லே யென்று நாங்கள் தீர்மானிக்கிருேம்.

மேலும் அந்த வியாச்சியத்தில் தாவாதொகை முன்சிபின் அதிகாரத்திற்கு மேல்பட்டதாயிருக்கிற காரணத்திஞலேயே முன்சிபின் தீர்ப்பை மாற்ற ஜில்லா ஜட்ஜிக்கு நியாயமில்லே. ஏனென்ருல் முன்சிபின் தீர்மானம் வியாச்சியத்தின் சாதகபாதங்களே பாதித்ததாக சொல்லப்படவுமில்லே; ருசுவு செய்யப்படவு மில்லே. தாவா தொகையைக் குறைத்ததாக சொல்லும் காரணத்திஞல் அதிகாரமில்லே என்கிற

குற்றமென்று தெரிந்தாவது குற்றம் பொருந்திய எண்ணத்தோடாவது செய்வதிஞல் மாத்திரம் குற்றமுள்ளதாகிற யாதொரு செய்கையைப் பலர்கூடி செய்தால் அவர்களில் எவனவன் அப்படி தெரிந்தாவது அந்த எண்ணத்தோடாவது அந்தச் செய்கையில் சேருகிருனே அவனவன் தனித்தனி அப்படி தெரிந்தாவது அந்த எண்ணத்தோடாவது அந்தச் செய்கையைச் செய்தாற்போலவே, அவ்னவன் அதற்கு உத்தரிக்ககடவான்.

ஒரு செய்கையைக் செய்வதிஞலாவது செய்யாமல் விடுவதிஞலாவது யாதொரு கெடுதியை உண்டுபண்ணுவதாகிலும் அந்தக் கெடுதியை உண்டுபண்ணுவதற்கு எத்தனப்படுவதாகிலும், ஒரு செய்கையைச் செய்வதும் ஒன்றைச் செய்யாமல் விடுவதுமாகிய இவ்விரண்டிஞலும் அந்தக்கெடுதியை உண்டுபண்ணுவது அதே குற்றமாகுமென்று தெரிந்து கொள்ள வேண்டியது.

பல செல்கைகளிஞலே ஒரு குற்றஞ் செய்யப்பட்டால், அந்தக் செய்கைகளிலெதையாவதொன்றை எவனுகிலும் வேணுமென்று தனித்தாவது வேருெருவருேடு சேர்ந்தாவது செய்து, அந்தக் குற்றத்தைக் கூட்டாய் முடிப்பானுகில் அவன் அந்தக் குற்றத்தைக் செய்தவனுகிருன்.

ஒரு குற்றமுள்ள காரியத்தைச் செய்வதில் பலபேர் பிரவேசித்திருந்தாலும், சம்பந்தப்பட்டிருந்தாலும், அந்தக்காரியத்திலே, அவர்கள் வெவ்வேறு குற்றங் செய்தவர்களாகலாம்.

அவள் இறந்தபின்பு அந்தத் தத்து புத்திரன் அந்த கடனை வாதிக்கு கிரயம் செய்து விட்டான். ஆனல் அவனுவது வாதியாவது வார்சு பத்திரம் வாங்கியிருக்கவில்லை. ஆகையால் வாதி ஷை கடனை வசூல் செய்ய பாத்தியமுள்ளவனல்ல என்று தீர்ப்பு ஆய்விட்டது. இந்த பிரஸ்தாப வியாச்சியத்திலோ வார்ஸ் பத்திரம் பெற்றிருப்பதால் ஷை வியாச்சியம் இதற்கு ஒப்பானதல்ல. 2-வது வியாச்சியத்தில் படாதூர் கான் என்கிற ஒரு அடமானதாரன் அனேக வார்சுகளை விட்டு இறந்து போனுன். இந்த வார்சுகளில் ஒருவன்மட்டும் ஷை படாதூர் கானுக்குச் சேரவேண்டிய கடன்களை வசூலிக்க வார்சு புத்திரம் வாங்கிக்கொண்டான். இந்த அடமான பாத்தியத்தின் பின்னிட்டு அவன் சாந்திராம் என்கிற மற்ரெருவனுக்கு விற்பனை செய்து தான் பெற்ற வார்ஸ் பத்திரத்தையும் அவனுக்கு கொடுத்துவிட்டான். சாந்திராம் கடனை வசூல் செய்ய வியாச்சியம் தொடர்ந்தான். இந்த கோர்ட்டில் அந்த வியாச்சியம் செல்லாதென்று தீர்மானித்து விட்டார்கள்.

இந்த வியாச்சியத்திலும் அம்சங்கள் பிரஸ்தாப கேசுக்கு பொருந்தாது அதில் எல்லா வார்ஸ்தார்களுக்கும் சேரவேண்டி கடனை வசூலிக்க வார்சுதார்களில் ஒருவன்மட்டும் வார்சு பத்திரம் பெற்றிருந்தான். அதன்படி அவனுக்காக மட்டில் அவன் வியாச்சியம் செய்யலாமேயொழிய வேறில்லை. (1882-ளுத்திய IV-வது ஆக்ட்டு ஆருவது பிரிவு பார்க்க). மேலும் அந்த ஒரு வார்சானவன் கடன் தொகையில் ஒரு பாகத்துக்கு மட்டுமே பாத்தியஸ்தன். அப்படியிருக்க பூராகடன் பாத்தியதையையும் அவனுக்கு விற்பனை செய்ய பாத்தியம் கிடையாது. ஆகையால் இந்த கேசும் அப்பீல்பிரதிவாதிக்கு அனுகூலப்பட்டதல்ல. உதாரணமாக எடுத்து காட்டியபடி ஷை கேசில் தீர்ப்பு சொல்லுவதில் ஜட்ஜியானவர் கோர்ட்டார் முதலில் டிக்கிரிதாரனை அந்தப்படி பணம் செலுத்தினதாக உறுதி செய்யச் சொல்லிபின்னிட்டு அதை ஒப்புக்கொண்டோ, அல்லது அதைப்பற்றி விசாரணை செய்தோ நடவடிக்கை நடத்தவேண்டியதென்றும் வாதிக்கப்படுகிறது. துக்காராமுக்கும் பாபாசி வகைருக்களுக்கும் நடந்த வியாச்சியத்தினல் இந்த வாதத்துக்குக்கொஞ்சம் ஆதாரமேற்படுகிறது. ஆனல் அந்த வழக்கில் சில தவணைகளில் பணம் செலுத்துகிறதென்று ஏற்பட்டிருந்தது. ஆகையால் கால நிர்ணய தோஷத்துக்குள்பட்ட பிரஸ்தாப கேசுக்கு அதை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது. இந்த அம்சம் இந்த கோர்ட்டின் ஒரு ஜட்ஜி முன்பாக கோகுல் சந்துக்கும், பிக்காவுக்கும் நடந்த வியாச்சியத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு டிக்கிரி பெற்றவனுக்குப் பிரதிகூலமாய்த் தீர்க்கப்பட்டது ஆகையால் காலநிர்ணயமான டிக்கிரியை நிறைவேற்றகொடுத்துக் கொண்ட இந்த விண்ணப்பத்தைக் கீழ்கோர்ட்டார்கள் தள்ளுபடி செய்து இந்தியா காலநிர்ணய சட்டத்தின் 1-வது ஜாபிதாவின், 182-வது வாக்கியத்தின் கீழ் காலநிர்ணய தோஷத்துக்குள்பட்டதென்பதில் சந்தேகமில்லை. 1911-ளு நவம்பர் மீ 23-உ 25 ரூபாய் அதற்காக செலுத்தபட்டதாகச் சொல்லும் அம்சத்தைக் குறித்து அவர்களுக்கு விசாரிக்கவும் அதிகாரம் கிடையாது.

ஆகையால் இந்த அப்பீலை செலவுகள் உள்பட தள்ளுபடி செய்யப்பட்டது.

ALLAHABAD HIGH COURT.

அலாஹாபாத் ஐகோர்ட்டு.

1913-ஞ த்திய 78 நெ. அப்பீல்

ஜட்ஜிகள் :—மிஸ்டர் ரைவ்ஸ்.
மிஸ்டர் பிக்கட்டு.

ரங்குலால்:—அப்பீல் வாதி.

v.

சுண்ணுலால்:—அப்பீல் பிரதிவாதி.

சுருக்கம்:—ஒரு விதவைக்கு வரவேண்டிய கடனைத் தான் வசூல்செய்து கொள்ளுவதாக ஒப்பி அதைத் தீர்த்துவிட்ட ஒருவன் அந்த விதவையானவள் தான் கோர்ட்டில் பெற்றிருந்த பாத்திய உறுதிபத்திரத்தையும் அவனுக்குக் கொடுத்து விட்டிருந்தால் அப்படி ஒப்பினவன் அந்த கடனை வசூலிக்கவியாச்சியம் தொடரலாம்.

வியாச்சியம்:—மெயின்புரி சபார்டினேட்டு ஜட்ஜியின் தீர்ப்பின் பேரில் மெயின்புரி ஜில்லா ஜட்ஜி செய்த அப்பீல் தீர்ப்பின்பேரில் அப்பீல்.

தீர்மானம்.

அடமானத்தின் பேரில் விற்பனை செல்லுமா என்பதைப்பற்றி இந்த அப்பீல் செய்யப்படுகிறது. கேசு விவரம் என்ன வெனில், ஏககுடும்பத்துக்குக் காரியஸ்தனுயிருந்த மேகநாத் என்பவன் 3-ம் சில்லரை பிஸ்வாஸ் நிலத்தை மிஹின்லால், டேலிராம் என்பவர்களுக்கு ஈடுகாட்டி, தலைக்கு 600 ரூபாயாக அவர்களிடம் கடன் வாங்கியிருந்தான். இந்த அடமானம் பெற்ற 2 பேரும் இறந்துவிட்டார்கள். 1, 2, 3, 4 வாதிகள் மிஹின்லால் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். டேலிராமும் இறந்துவிட்டான். அவனுக்கு ஒரு தத்து புத்திரன் குலாப் என்பவன். இந்த குலாப்பும் இறந்து போனுன். குலாப்புனுடைய சொத்துக்கு அவனுடைய விதவையாகிய மகம்மது விசித்திரகண்வார் என்பவள் தான். குலாப்புக்குவரவேண்டிய

S .A. No. 1631 of 1911.

வெங்கடராமபிள்ளை (மைனர்) அப்பீல் வாதி.

v.

ஆதிமூலம் செட்டியார்—அப்பீல் பிரதிவாதி.

ஒரு மைனர், தன் வயதை மாறுபாடாக தெரிவித்து, பணம் பெற்றுக்கொண்டால் அச் செய்கை மோசமாகிறது; அதை அந்தமைனர் திருப்பிக் கொடுக்கும்படி செய்யப்படலாம். ஆனுல் மோசமில்லாமலிருந்தால் தொகையை திருப்பிக்கொடுக்க உத்திரவு செய்யக்கூடாது. மைனர் தசையில் மோசமில்லாமல் தான் கொடுக்கப்பெற்ற தொகையை திருப்பிக்கொடுக்க தன் பெயரில் தாவா ஏற்பட்டால், தன் மைனர் தசாச்சம்மந்தமான வாதத்தை ஜவாபாகச் சொல்ல மறுக்கப் படமாட்டார்.

மைனர் தனக்கு யுக்தவயது வந்தபிறகு செய்த குடும்பசொத்தினேற்பாட்டை, மைனர் தசையில் பட்டகடனை ஷை ஏற்பாட்டுக்கு பிந்தி ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவரால் ரத்து செய்யப்படமாட்டாது. கடன் ட்ரான்ஸ்பர் செய்யும் தஸ்தாவேஜில் மைனர் அத்தாக்ஷியாகக் கையொப்ப மிட்டிருந்த போதிலும் அம்மைனரை மறுக்கமாட்டாது.

C. S. No. 90 of 1912.

ஸௌத் இந்தியா எக்ஸ்போர்ட் கம்பெனி } வாதிகள்.

v.

விஸ்வஞதய்யரும் மற்றவர்களும் } பிரதிவாதிகள்.

தன் புருஷன் மரணமடைந்த பிறகு புருஷன் வியாபாரத்தை நடத்தும் ஒரு ஹிந்து ஸ்த்ரீ அவசியத்தின் பொருட்டு பராதீனம் செய்யலாம். அந்த ஸ்த்ரீயினிடம் பவர் ஆப் அடர்னி பெற்ற சொத்தின் மறு வார்சு அந்த ஸ்த்ரீயின் மைனர் தசையில் அவளுக்கு கடன் கொடுக்க பிரேரேபிக்கிருன், அவள் மைனராக யிருந்தாளென்கிற வாதத்தைக் கொண்டு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 12 NOV 1914 MADRAS.

தென்று வாதிக்கப்படுகிறது. கீழ் கோர்ட்டார்கள் சிவில் புரொசிடர் கோட் 21-வது ஆர்டர், 2-வது விதி, 3-வது வாக்கியத்தின்படி இப்படி செல்லானதாகச் சொல்லப்படுவதை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பீல் பிரதிவாதி தரப்பிலோ இந்த கோர்ட்டின் முந்தி அனேக உத்திரவுகளை ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. அவைகளில் ரேஷன் சிங்குக்கும் மாடாதீனுக்கும் நடந்த கேசு ஒன்று ஆனால் இந்த வாதத்தில் 1908௵த்திய V-வது ஆட்டு ஜாரியானதினால் நேரிட்டமாறுதல்கள் கவனிக்கப்படவில்லை 1882௵த்திய சி. பு. ஆக்ட்டின் 258-வது செக்ஷன்படி கோர்ட்டுக்குத்தெரியாமலும் அவர்களால்உறுதிப்படுத்தாமலும்கொடுக்கப்பட்ட தொகை டிக்ரிமொத்தத்திற்காக கொடுத்ததாக ஒப்புக்கொள்ளக்கூடாது. இப்போதிய 21-வது உத்திரவிலோ அந்த டிக்கிரியை நிறைவேற்றுகிற கோர்ட்டார் அந்தமாதிரி செலுத்தப்பட்டதொகையைஒப்புக்கொள்ளக் கூடாதென்று இருக்கிறது. இந்த மாறுதலை யனுசரித்து டிக்கிரியை நிறைவேற்றுவதற்கான கால நிர்ணய சம்பந்தமாய் உண்டாகும் தோஷம் இந்தப்படி உறுதிப் படுத்தாமல் தொகை செலுத்துவதால் நீங்காது என்று சீ.பு. கோர்ட்டுக்கு வியாக்கியானம் செய்திருக்கும் மிஸ்டர் அமீரலி, மிஸ்டர் வுட்ரூப் என்பவர்களுடைய அபிப்பிராயத்தில் நான் கலக்கிறேன். ஆனால் அப்பீல் வாதி 1913-௵ ஜனவரிமீ 24உ டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக கொடுத்த விண்ணப்பமே சி. பு. கோர்ட் 2-வது உத்திரவு, 2-வது விதியின்கீழ் ரூ. 25 கொடுத்ததை ஸ்திரப்படுத்துவதற்கான விண்ணப்பமென்று ஒரு சாதுரியமான வாதம் செய்யப்படுகிறது. டிக்கிரி பெற்றவன் அம்மாதிரியான விண்ணப்பம் செய்துகொள்ள கால நிர்ணயம் ஒன்றும் ஏற்பட்டிருக்கவில்லை யென்றும், ஆகையால் டிக்கிரியை நிறைவேற்றுகிற வார்ஸ் பத்திரம் பெற்றவர்தவிர அவரால் கிரயம் பெற்றவருக்கு கடன் வசூல்செய்ய ஆக்டின்16-வது பிரிவுபடி பாத்தியமுண்டாகாதென்று அபிப்பிராயம் கொண்டார். ஆனால் இது சரியான அபிப்பிராயம் அல்ல. அந்தகேசில் மேற்சொல்லியபடி அடமான சொத்தில் ஒரு பாகத்துக்கு மாத்திரம் செல்லக்கூடிய வார்சு பத்திரத்தின் பலத்தின்பேரில் பூராகடனையும் இதராளுக்கு விற்க நியாயம் ஏற்படவில்லை. ஆனால் பிரஸ்தாப கேசுக்கு துர்க்கா கண்வருக்கும் மாடுமாலுக்கும் நடந்த வியாச்சியம் பொருந்தும். இந்த வியாச்சியத்தில் விதவையாவது அவளால் கிரயம் பெற்றவராவது வார்சு பத்திரம் வாங்காமலே அந்த கிரயம் செல்லுமென்றும் கிரயம்பண்ண அவளுக்கு பாத்தியமென்று தீர்க்கப்பட்டது. இந்த அப்பீல் கேசிலோ வார்ஸ் சர்டிபிகேட்டு பெற்றிருக்கிறது. 1889-௵த்திய VII-வது ஆக்ட்டு, 4-வது பிரிவுபடி 5, 6, 7 வாதிகள் வேறே வார்சு பத்திரம் வாங்காததினால் கேசு செல்லாதென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் மகம்மது விசித்திர கண்வார் வார்சுபத்திரம் பெற்று அந்த பத்திரத்தையும் கிரயதாரனுக்கே கொடுத்துவிட்டாள். அந்தப்படி பத்திரத்தை கைமாறினால் அது செல்லாதென்று 1889-௵த்திய VII-வது ஆக்டின் அர்த்தமாக பிரதிவாதி வாதிப்பதுபோல சட்ட நிரூபண சபையாருடைய எண்ணமென்று தோன்றவில்லை. அடமானத்தொகையை விற்பனை செய்யபாத்தியமிருக்க பாத்திய சர்டிபிகேட்டை கொடுக்க பாத்தியமில்லை யென்பது பொருந்தாது. மேலும் வாதிதான் புனரபி விற்பனையின் பேரில் பாத்திய சர்டிபிகேட்டு பெற மறுபடி அதே விஷயத்துக்காக கட்டணம் கட்டவேணுமென்பதும் ஷை பிரிவில் சொல்லப்படவில்லை.

ஆகையால் இந்த வியாச்சியம் சரியானதென்று தீர்மானித்து இந்த அப்பீலை செலவுள்பட தள்ளுபடி செய்திருக்கிறோம்.

ஸிவில் விஷயங்கள்.

S. A. No. 1821 of 1911. (9-2-14.)

கா. நாராயணஸாமி அய்யர்—அப்பீல் வாதி.

v.

சொர்ணம்மாளும் மற்றவரும் } அப்பீல் பிரதிவாதிகள்.

போகிய அடமான விஷயத்தில் விதிக்கப்படும் முனிசிபல் ஜலவரி, ஆஸ்தி பரிவர்த்தனை சட்டத்தின் 76 (c) பிரிவின் அர்த்தப்படி போகிய ஆஸ்தியின் வரும்படியிலிருந்து சில விடப்பட வேண்டியதாகையால், போகியதாரரால் ஏற்றுக்கொள்ளத் தக்கது. சொத்தின் பேரில் தான் காட்டிய மரகளஞ்சியத்தை போகியதார் எடுத்துவிட கடமைப் பட்டவர்; மேலும் அதன்சிலவை அடமானத்தின்பேரில் தாக்க அவருக்கு பாத்தியமில்லை. அடமான பிரதேசத்தில் தண்ணீர்குழாய் போடுவதற்கான சிலவையும் போகியம் வைத்தவர் பெயரில் கணக்கிடக்கூடாது.

O. S. A No. 4 of 1910.

துரைசாமிசெட்டி ... . அப்பீல் வாதி.

v.

கோவிந்த செட்டியும் மற்றவர்களும் } அப்பீல் பிரதிவாதிகள்.

ஸிவில் விவகாரசட்டம், 19-ம் பாகம், 3 வது பகுதி.

பிரதம டிக்ரி ஏற்பட்ட பிறகு பாக வியாஜ்ஜியத்தின் ஓர் கக்ஷிதார் தனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிற மட்டிலும் நம்பிக்கை யுண்டாயிருக்கிற மட்டிலும் வரவேண்டிய கொடுக்க வேண்டிய துகைகளை செப்பி கொடுக்கப்பட்ட வாக்மூலம் பிரமாண பத்திரிக்கையாகமாட்டாதென்றும் வியாஜ்ஜியத்தின் மற்றக் கக்ஷிக்காரர்களுக்கு விரோதமாய் அது பெறத்தக்கதல்ல வென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஷை கடனை வசூல் செய்யும் பொருட்டாக ஷை விதவையானவள் 1889ஹூத்திய VII-வது சட்டத்தின்படி வார்சுபத்திரம் பெற்றாள். அந்த வார்சு பத்திரத்தில் இந்தக்கடன் ஒன்றுதான் குறிப்பிட்டிருந்தது. அது மகம்‘து விசித்திர கண்வாருக்கே பாத்தியப்பட்டதென்றும் கண்டிருந்தது. அவள் தன்னுடைய பாத்தியதையை 5, 6, 7-வாதிகளுக்கு விற்பனை செய்து வார்சு பத்திரத்தையும் அவர்களுக்குக்கொடுத்துவிட்டாள். பிரதிவாதிகள் மேக்நாத், அவள் பிள்ளை ரங்குலால், மேக்நாத்தின் ஒரு மைனர்பேரன் மகம்மது விசித்திர கண்வாரும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார்கள். ரங்குலால் ஒருவனே வியாச்சியத்தை எதிர்கக்ஷியில் நடத்தினன். அவன் தரப்பில் நீலிராம் கொடுத்த ஈடுகாட்டிய அடமானக் கடன் பாத்தியதையை மகம்மது விசித்திர கண்வார் விற்பனை செய்ய அவளுக்கும் பாத்தியமில்லை யென்று வாதிக்கப்பட்டது. இந்தவாதம் குலாப் என்பவன் நீலிராமுக்குத்தத்து புத்திரன் அல்லவென்று சொல்லி செய்யப்பட்டது.

கீழ் கோர்ட்டார் இருவரும் இந்த அம்சத்தைப் பிரதிவாதிக்குப் பிரதிகூலமாய்த் தீர்ப்புசெய்து வாதிக்கு அனுகூலம் செய்தார்கள்.

இந்தக் கோர்ட்டில் செய்யப்படும் ஆக்ஷேபமாவது, இந்தியன் வார்சு பத்திரிகையைப் பெறும் ஆக்டின் 4-வது பிரிவுபடி 5,6,7 வாதிகள் வார்சு பத்திரம் பெறாததினால் அவர்கள் தாவா செல்லா தென்பதுதான்.

இந்த ஆக்ஷேபனைக்காதாரமாக 2 கேசுகளை எடுத்துக் காட்டப்பட்டது. அவையாவன:—(1) கருப்பசாமிக்கும் பிச்சுவுக்கும் நடந்த வியாச்சியம்; (2) அலாஹதாத்கானுக்கும் சாந்திராமுக்கும் நடந்த வியாச்சியம். முதலாவது கேசில் சுப்பம்மாள் என்கிறவள் கடன் கொடுத்திருந்தாள். அவளுக்கும்ஒரு சுத்து புத்திரன்

சபார்டினேட் ஜட்ஜி ராஜிஞமாவின் பேரில் செய்த உத்திரவின் பேரில் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்யவுமில்லே. அப்படிப்பட்ட சபார்டினேட் ஜட்ஜியின் உத்திரவின் பேரிலும் ஜில்லா கோர்ட்டார் செய்த உத்திரவின்பேரிலும் இந்த 2-வது அப்பீல் செய்யப்பட்டதுமல்ல. ஷை இரண்டு கோர்ட்டாருடைய உத்திரவும் ராஜிஞமாவின் பேரில் ஆனதேயொழிய வேறல்ல.

மற்ருெரு ஆக்ஷேபனே என்ன வென்ருல், 96-வது பிரிவு 3-வது வாக்கியத்தின்படி வாதி பிரதிவாதிகளுடைய சம்மதத்திஞல் கோர்ட்டார்செய்யும் உத்திரவின் பேரில் அப்பீல் கிடையாதென்பது இதற்கு சமாதானம். டிக்கிரி செய்ததே வாதிப்பிரதிவாதிகளின் சம்மதத்தின் பேரிலல்ல. ஆஞல் ராஜிஞமாவில் கண்ட ஒப்பந்தம் வாதிப்பிரதிவாதிகளின் சம்மதத்தின்பேரில் ஆனதென்றும் அந்தப்படி ரிகார்ட் செய்து அதையனுசரித்து டிக்கிரி செய்யப்பட்ட தென்பதுடன் வாதிப்பிரதிவாதிகளில் ஒருபக்கத்தாரிட ஆக்ஷேபனேயிருந்த போதிலும் பிரதம ஆக்ஷேபனே செல்லாது.

இந்த 2-வது அப்பீலேப்பற்றி யோசிப்போம். வாதி வியாச்சியத்தை விலக்கி விடுகிறதென்ற ஷரத்தின்பேரில் முதல் பிரதிவாதி விக்கிரயபத்திரம் கோர்ட்டிலிருந்து வந்தபிறகு எழுதிக்கொடுப்பதாய் ஒப்பி ராஜிஞமாவுக்குடன்பட்டதாகவும், தான் விக்கிரயபத்திரம் யெழுதிக் கொடுக்க கட்டாயப்படுத்தும்படிக்கான ஒரு டிக்கிரிக்கு 2-வது பிரதிவாதி ஒப்புக் கொள்ளவில்லேயென்றும், அப்பீல்தாருடைய வக்கீல் வாதிக்கிருர். கோர்ட்டார் தன் பேரில் டிக்கிரி செய்ய 2-வது பிரதிவாதி ஒப்பிஞரோ இல்லேயோ, கிரயபத்திரம் எழுதிக்கொடுக்க அவனே கட்டாயப்படுத்தும் அம்சம் யோசிக்கவேண்டிய அம்சமல்ல. இதில் முக்கியமான அம்சம் என்னவெனில், வியாச்சிய

பங்காளத்தில் போர்ட்டு வில்லியம் ஐகோர்ட்டு.

அசல் சிவில் வியாச்சியம்.

1911ஞத்திய 914 நெ.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் பிளெட்சர்.

கே. பீ. டட்டு வகைரு 2 பேர்—வாதிகள்.

v.

ஷாமல்தன் டட்டு வகைரு 2 பேர் } பிரதி வாதிகள்.

சுருக்கம்:—ஒரு கோர்ட்டாருடைய உத்திரவு பெற்றுவேலேயிலிருந்து நீங்கின மாஜி ரிசீவர்கள் அவர்கள் அப்படி நீங்கும் காலத்தில் கோர்ட்டில் ஒப்படித்த கணக்குகளில் சேர்ந்த சில மொத்தங்களே அவர்களிட மிருந்து வரப்படுத்த பின்ஞல் ஏற்பட்ட ரிசீவர்கள் வியாச்சியம் கொண்டுவரக்கூடாது. அது சம்பந்தமான சொத்தைச் சேர்ந்தவர்கள் தான் அந்த மாதிரி வியாச்சியம் தொடரலாம்.

கேஸ் விவரம்:—கோபால் லால் சீல் என்பவன் ஒருவன் அதிக பணக்காரன். அவன் இறந்துவிட்டான். அவனுக்கு வார்ஸ்கள் அவனுடைய 2 விதவைகள். அவன் ஒரு மரண சாசனம் எழுதி வைத்துப்போஞன். அந்த வில்லு விஷயமாய் வியாச்சியங்கள் நடந்தது. இந்த கோர்ட்டில் அப்போது ரிஜஸ்தரார் உத்தியோகத்திலிருந்த மேஸ்தர் ருபர்ட் பெல் சேம்பர்ஸ் என்பவரை அந்த சொத்தை பரிபாலனம் செய்பவராய் ஏற்படுத்தப்பட்டார். பின்னிட்டு அந்த வியாச்சியமும் பரிபாலன சம்மந்தமான வியாச்சியமும் ராஜியாய் விட்டது. மேற் குறித்த 2 பிரதிவாதிகளும் அந்த சொத்துக்கு பரிபாலன கர்த்தாக்களாக ஏற்படுத்தப்பட்டார்கள். மிஸ்டர் ராபர்ட்டு பெல் சேம்பர்ஸ் பரிபாலித்த காலத்தில் அந்த சொத்தின் பரிபாலன விஷயமாய் பங்காளத்து பாங்கிக்கு அதிக பணம் கொடுப்பதாயிருந்தது. பின்னிட்டு இந்த கடனே இறுக்க பாரி மொத்தம் கடஞக கொள்ள

வேண்டியதாயிற்று. எல்லாருடைய சம்மதத்தின் பேரில் அப்போதிய ரிசீவர்கள் 100-க்கு வருஷம் 1-க்கு 7 ரூபாய் வட்டியாக வேண்டிய மொத்தத்தை கடன் வாங்கும்படி கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். அப்படி எழுப்பின கடன் மொத்தத்திலிருந்து பங்காள பாங்கிக்குச் சேரவேண்டிய மொத்தத்தை கொடுத்துவிட்டு இன்னும் அந்த கடன் எழுப்ப பிடித்த எல்லா செலவுகளேயும் அதிலிருந்தே தீர்க்கவேணு மென்றும் உத்திரவாயிற்று. அதையனுசரித்து ஒரு தரகரிக்கு 100-க்கு 1 மேனிக்கு கொடுப்பதாக ஏற்பாடு செய்து அவன் மூலமாய் சாண்டர்சன் கம்பெனியினிடம் பணம் வாங்கி ஷை தரகும் செலுத்தி மற்ற எல்லா சல்லியங்களேயும் தீர்த்துவிட்டார்கள். அதில் 6,000 ரூபாய் சாண்டர்சன் கம்பெனியாரிடம் நின்றிருந்தது. அதை முன்னுவிருந்த ரிசீவர்களால் வசூலுத்துக் கொடுக்கும்படி பிரகிருதம் இருக்கும் ரிசிவர்கள் இந்த வியாச்சியம் செய்கிறார்கள். இந்த வியாச்சியம் சரியான தென்று நான் நினைக்கவில்லே.

வியாச்சியம் கொண்டுவந்த காலத்தில் மேல் கண்ட 6,000 ரூபாய் மாஜீ ரிசீவர்கள் கையிலிருந்ததென்று ஏற்படவில்லே. சாண்டர்சன் கம்பெனி மூலமாய் அவ்வளவு சிரமமில்லாமல் பணம் ஏழும்பியிருக்குமென்று வாதிகள் சொல்லவில்லே. பிரதிவாதிகள் முதலில் சாண்டர்சன் கம்பெனியார் 6,000 ரூபாய் நிறுத்திக்கொள்ளக் கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். ஆனுல் அந்த கம்பெனியார்பிடிவாதமாய் அந்த மொத்தம் தங்களுக்குச் சேரவேண்டியதென்று சொன்னுர்கள். இந்த கடன்வாங்க நேரிட்ட செலவுகளே பிரதிவாதிகள் கொடுத்தார்கள். ஆகையால் அந்த செலவுகள் சரியான செலவுகளென்று ருசு செய்யவேண்டியது அந்தப் பிரதிவாதிகளேப் பொறுத்ததாயிருக்கிறது. ஆனுல் இந்த 6,000 ரூபாயை சாண்

ஆக்ஷேபனே முன்சிபு முன்னிலேயில் கூறப்படவுமில்லே. (11-வது பிரிவு (A) வாக்கியம்) கீழ் அப்பீல் கோர்ட்டின் தீர்ப்பைமாற்றி அந்த அப்பீல் கேசின் சாதக பாதகத்தை ஆராய்ச்சி செய்து தீர்ப்பு சொல்லும்படி கீழ் கோர்ட்டுக்கு கட்டை அனுப்புகிறோம். அப்பீல் பிரதிவாதி இந்த 2-வது அப்பீலில் அப்பீல் வாதிக்கு நேர்ந்த செலவுகளே கொடுக்கவேண்டியது.

ALLAHABAD HIGH COURT.

அலஹபாத் ஐகோர்ட்.

ஜட்ஜி:—ஜஸ்டிஸ் பிக்கட்டு.

E. S. A. No. 1496 of 1913

19 May 1914.

பஜன் லால் ... ... அப்பீல் வாதி.

v.

சேதா லால் ... அப்பீல் பிரதிவாதி.

சுருக்கம்:—ஒரு டிக்கிரிக்காக கொடுக்கப்பட்ட அல்லது பர்த்தி செய்யப்பட்ட மொத்தத்தைக் குறித்து கோர்ட்டாரால் உறுதிமொழி பெறுதிருந்தால் அதனுல் காலநிர்ணய சட்டத்தின்படி டிக்கிரி நிறைவேற்றுவதற்காக காலவரம்பை நீடிக்க பொருந்தாதென்பது.

வியாஜ்ஜியக்குறிப்பு:—சந்தோறீ முன்சீபின் தீர்ப்பைக் காயப்படுத்தியமோரடாபாத் அடிஷனல் சபார்டினேட் ஜட்ஜியின் டிக்கிரியின் பேரில் 2-வது அப்பீல். இது ஒரு டிக்கிரிபெற்றவன் செய்யும் அப்பீல். டிக்கிரி பிறந்தது 1909ஷ ஜுலைமீ 1உ. அதை நிறைவேற்ற மனு கொடுத்தது 1913ஷ ஜனவரிமீ 24உ. இது பிரத்தியக்ஷமாய் கால நிர்ணயதோஷத்துக்குட்பட்டிருக்கிறது. ஆனுல் 1911ஷத்தி நவம்பர்மீ 23உ கடன்பட்ட பிரதிவாதி, கோர்ட்டுக்குத் தெரியாமல் 25 ரூபாய் தீர்ப்பு தொகைக்காக செலுத்தியிருப்பதாயும், அதனுல் காலநிர்ணயதோஷம் நிவர்த்தியாய்விட்ட

பவர் ஆப் அடார்னீ பெற்றவர் பிந்தி மறுதளிக்கத் தக்கவனல்ல.

C. C. C A. No. 8 of 1913.

சிவராம பிள்ளை ... . அப்பீல் வாதி.

v.

வீரப்ப பிள்ளை ... அப்பீல் பிரதிவாதி.

விவாக சம்பந்தமான சுதந்தரங்களை மறுபடியும் கொடுத்து விடுவதற்கான தாவாவில் விவாகம் ஆசாரப்படி கிரமமாய் நடத்தப்பட்டதென்று வாதி சொல்லியபோது, குறிப்பிடாமல் பொதுவாய் சிலகிரியைகள் நடத்தப்படவில்லையென்று பிரதிவாதிகள் மொழிந்தனர். வாதி ஸாக்ஷியத்தின் பேரில் விவாகம் கிரமமாய் நடத்தபட்டதென்று கோர்ட்டார் தீர்மானிக்கத்தக்க வர்களென்றும், விவாகத்துக் குறிய முக்கிய கிரியைகள் எவை, அவை நடத்தப்பட்டனவா என்கிற விவாதாம்சங்களை ஏற்படுத்தக் கடமைப்பட்டவர்களல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விவாக சம்பந்தமான சுதந்தரங்களை மறுபடியும் கொடுத்து விடும்படி பிறப்பிக்கபட்ட டிக்கிரியில் மனைவியை சிறைச்சாலையில் செய்து வைக்கும் நிறைவேற்றல் கன்று உத்திரவு செய்யவும் அல்லது திரி உத்திரவு செய்யாமல் விட்டு கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு.

மைனராயிருக்கும் மனைவியை பு ஸ்வாதீனத்தில் கொடுக்கும் மனைவியின் தந்தைகளுக்கு இன்ஜங்ஷன் என்னும் கட்டளையைக்கூட கோர்ட்டார் அளிக்கலாம். மேற் சொல்லிய கட்டளையினால் மைனர் மனைவியை அவர் தாய்தந்தைகள் தூரமல்லது ஒதுக்கமான இடத்தில் புருஷன் ஸ்வாதீனத்தில் கொடுக்க கடைமைப்பட்டவர்களாக அர்த்தம் செய்யக்கூடாது. புருஷன் கோரிய காலத்தில் தங்கள் வீட்டில் அப்பெண்ணை ஒப்புவைக்க தான் கடைமைப்பட்டவர்கள்.

துச் சாக்ஷிய ஆக்ட்டும், நியாய ஸ்தலங்கள், அதிகார வரம்புகள், குற்றங்களை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும் மறுக்கவுமுள்ள பொறுப்புகள், நியாய விமரிசைக்கேற்ற நடவடிக்கைகள், அப்பீல் ரிவிஷன் முதலியவைகள் நடத்தும் ஒழுங்குகள் மொத்தத்தில் நியாயத்தை நிலை நிறுத்துவதற்குறிய இத்தியாதி விஷயங்களை வரம்புபடுத்த கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்டென்னும் குற்ற விசாரணைச் சட்டமும் வழங்கி வருகின்றன இம்மூன்று சட்டங்களை பிணையிலாக ஒவ்வொரு விவகாரத்தில் அனுஷ்டிப்பதாயிருந்தபோதிலும் மனதில் எளிதாய் விளங்கச்செய்ய ஒன்றுக்குப் பின்னொன்ருய் வெளியாக்குவதே நலமென்பது கருத்து.

முதன் முதலில் இந்தியன் பீனல் கோட்டைத் துடங்குவோம்:—

இச்சட்டம் ஆங்கில துரைத்தனத்தாரின் சட்ட நிருபண சபையோரால் 1860 நூற்றுண்டில் 45-வது சட்டமாக செய்யப்பட்டு 1862-ம் வருஷம் ஜனவரிமாதம் முதல்தேதி முதல் வழங்கிவருகிறது. இச்சட்டத்திலுள்ள குற்றங்கள் விஷயமாய் காலஹரண தோஷம் அணுகாது; ஏனென்ருல், குற்றவாளியை சிட்சிப்பது அரசருடைய கடமை யாகையால் குற்றவாளியை எப்போதாவது விசாரணைக்குக் கொண்டுவரலாம். சக்கிரவர்த்தி, அயல் நாட்டு அரசர்கள், ராஜதூதர்கள், அயல்நாட்டுச் சத்துருக்கள் இவர்கள் இச்சட்டத்திற்குப் பாத்தியப்பட மாட்டார்கள். ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட இந்தியா தேசத்தின் எல்லைக்கு வெளியில் குற்றம்செய்த ஒருவன், இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டால் (1) குற்றம் செய்தப் பிரதேசத்துக்குக் குற்ற விசாரணைக்காக அனுப்பிவிக்கப்படலாம்; அல்லது (2) பிரிடிஷ் இந்தியாவிலேயே விசாரிக்கப்படலாம்.

முதல் வகையில், குற்றம் செய்தவிடம் (a) இந்தியா கவர்மெண்டாரால் நேமகஞ் செய்யப் பட்ட பொலிடிகல் ஏஜென்ட் என்னும் உத்தி யோகஸ்தரிருக்கும் பிரதேச அரசாக்ஷியாயிரு க்கலாம் ; (b) ஸ்வதந்திரத்தை யுடைய அன் னிய ராஜ்ஜியமா யிருக்கலாம் ; அல்லது (c) பிரிடிஷ் ராஜாங்கத்தாருக்குட்பட்டதாயு மிரு க்கலாம்.

முதற் சந்தர்ப்பத்தில்,குற்றவாளியிருக்கும் பிரதேசத்தின் ஜில்லா மாஜிஸ்ட் ரேட்டுக்குக் குற்றவாளியைப்பிடிக்க வாரன்டைப்பொலிடி கல் ஏஜென்டு பிறப்பித்து அனுப்பலாம். எதி ரியை மறியல் செய்து அனுப்பிவிடும்படி பிர தேச அரசாக்ஷியும் கவர்மெண்டாரைக் கேட் டுக்கொள்ளலாம்.

இராஜ்ஜிய தந்திர சம்பந்தமில்லாத வகை யாய் குற்றம்செய்யப்பட்டிருந்தால் எதிரியை விசாரணைக்குச் சுவாதீனப்படுத்த கவர்மெண் டாருக்குத் தெரிவித்துக்கொள்ளலாம். இவ் வாசாரம் இரண்டாவது சந்தர்ப்பத்தில்அனு ஷ்டிக்கப்படும்.

மூன்றாவது சந்தர்ப்பத்தில், இராஜத்துரோ கம் அல்லது ஒரு வருஷ காலத்துக்குறையா மல் கடின காவல் தண்டனைக்குறிய குற்றவா ளியைப் பிடித்து விசாரணைக்கு அனுப்பிவிட லாம்.

முக்கிய குறிப்புகள்.

செய்கை என்னும் வார்த்தையானது செய் யப்பட்ட ஒரு செய்கை யென்றும் தொடர்ச் சியான பல செய்கைகளென்றும் அர்த்தமா கும். செய்யாமல் விட்டுவிடுவதென்பது செய் யாமல் ஒரு தடவை விட்டுவிடுவதென்றும் தொடர்ச்சியாக பல தடவை விட்டுவிடுவ தென்றும் அர்த்தமாகும்.

டார்சன் கம்பெனியார் நிறுத்திக் கொண்டதி னால் அந்த சொத்துக்கு ஏதாவது அழிம்பு நேரிட்டதாக ஏற்படவில்லை. பிரதிவாதிகள் கோர்ட்டு ஆபீசர்கள் கோர்ட்டு உத்திரவுபடி கடன் வாங்கின பணத்தை உபயோகித்த வகையில் 6,000 ரூபாயை அவாள் கையில் வைத்துக் கொள்ளவில்லை. சாண்டர்சன் கம் பெனியார் நிறுத்திக் கொண்டார்கள். இப்படி யிருக்க தத்கால ரிசீவர்கள் மாஜீ ரிசீவர்கள் பேரில் அது விஷயமாய் வியாஜ்ஜியம் செய்ய நியாயம் எனக்குத் தென்பட வில்லை. மாஜீ ரிசீவர்கள் சார்ஜி ஒப்பிவித்த பின்பு அவாள் செய்திருக்க வேண்டிய கட மையை நிறைவேற்றத் தவறி விட்டார்களெ ன்று பின்னிட்டு வந்த ரிசீவர்கள் வியாச்சியம் செய்யவும் நியாயம் தென்படவில்லை. அப்படிப் பட்ட தாவாயிருந்தால் அந்த சொத்துக்கு பாத்தியஸ்தர்கள் கொண்டுவரவேண்டிய வியா ச்சியமே ஒழிய வேறில்லை. சாண்டர்சன் கம் பெனியார் கையில் ஷை 6,000 ரூபாய் இருந்து கொண்டிருக்கிறது. அவாளுக்கு அதை கொ டுத்துவிட சக்தியில்லாமற் போகவில்லை. பு... ...கள் வேணுமானால் அவாள்பேரிலேயே ...சியம் செய்து அந்த தொகையை வசூல் ...லாம். இந்த பாதி காரணங்களினால் வியாச்சியம் செல்லாது. அதை தள்ளு ...செய்து 2-வது தரத்தின்படி செலவுகள் ...க்கவேண்டியது.

கிரிமினல் விஷயங்கள்.

B. R. C. No. 252 of 1914—7-4-14.

பழனி கவுண்டன் ... ... எதிரி.

v.

இந்தியா சக்கிரவர்த்தி—அப்பீல் பிரதிவாதி.

ஒரு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தன்னிடம் விசாரணையிலிருக்கும் கேஸ் சம்பந்தமா யுள்ள நியாய விஷயத்தில் ஐகோர்ட்டாரு